**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE THIRUVIDAIMARUTHUR**

| | |
|---|---|
| Calender : | |
| Miscellaneous : | |
| Preliminary Register : CC 84/2024 | |
| Sessions : | |
| Deposition of Witness for : LW7/PW-7 | Village: கும்பகோணம் அரசு மருத்துமனை |
| Name :, மருத்துவர் சாய்கண்ணன் | Age :37 |
| | Taluk : கும்பகோணம் |
| Father's/Husband's Name : சந்திரன் | |
| | Religion : |
| Nationality : Indian | |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 11.03.2026.**

சாட்சியை திருநீலக்குடி தலைமைக் காவலர் திருமதி. அனிதா என்பவர் அடையாளம் காட்டி முன் நிறுத்தியவரை சத்தியபிரமாணம் செய்து முதல் விசாரணை பதியப்படுகிறது.

**1 முதல் 4 எதிரிகள் ஆஜரில் இருந்தார்கள்.**

**முதல் விசாரணை**:

நான் தற்போது கும்பகோணம் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணியாற்றி வருகிறேன். கடந்த 04.04.2023 ம் தேதி காலை 10 மணியளவில் கும்பகோணம் அரசு மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவில் பணியில் இருந்தபோது அன்றைய தினம் காலை 10 மணிக்கு சுமார் 36 வயது மதிக்கதக்க திரு முருகன் த/பெ முத்துசாமி ஆர்ச் மெயின்ரோடு பெரியார் நகர் சாக்கோட்டையைச் சேர்ந்தவரை அவரது நண்பர் பரணிதரன் சிகிச்சைக்காக அழைத்து வந்திருந்தார். அவரை நான் விசாரித்தபோது

சுயநினைவுடன் இருந்தார். நான் அவரை விசாரித்தபோது 03.04.2023 ம் தேதி இரவு 11 மணியளவில் தோப்புத் தெரு திருநாகேஸ்வரத்தில் இருந்தபோது அவரை 4 நபர்கள் கல்லால் தாக்கியதாக தகவல் சொன்னார். அருகில் இருந்த தனியார் மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை செய்து கொண்டாதவும் கூறினார். நான் அவரை பரிசோதித்தபோது அவருக்கு கீழ்க்கண்ட காயங்கள் காணப்பட்டது. 1. அவரது இடது முன்புற நெற்றியில் அடிபட்ட வீக்க காயம் காணப்பட்டது, 2. இடது கண் சிவந்த நிலையில் இருந்தது. 3. புருவ மேற்பகுதியில் வெட்டு காயத்திற்கு தனியார் மருத்துவமணையில் தையல் போட்டிருந்தார். அவருக்கு முதல் உதவி செய்து உள்நோயாளியாக அனுமதித்து சிகிச்சை அளித்தேன். அவருக்கு ஏற்பட்ட காயம் சொற்ப காயம் என கருத்துரை வழங்கி காயச்சான்று வழங்கினேன். **(மேற்படி விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** மேற்படி காயங்கள் மேற்சொன்ன விதத்தில் தாக்கியிருந்தால் ஏற்பட வாய்ப்புள்ளது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை.**

விபத்து பதிவேட்டில் அசா1ஐ நான்கு தெரியாத நபர்கள் தாக்கியதாக என்னிடம் கூறினார்கள் என்றால் சரிதான். மேற்படி விபத்து பதிவேட்டில் அசா1ஐ பரணிதரன் சிகிச்சைக்கு அழைத்து வந்தார் என்றால் சரிதான். அசா1ன் எந்த பக்க புருவத்தின் மேற்பகுதியில் தையல் போட்டிருந்தார் எனது பதிவேட்டில் குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்றால் சரிதான். ஒரு நபருக்கு கூட்ட நெரிசலில் ஏற்படும் தள்ளுமுள்ளு அருகில் இருந்த EB போஸ்ட்டில் மோதி கருங்கல் சாலையில் கீழே விழுந்தால் மேற்படி காயங்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளதா என்றால் வாய்ப்பு உள்ளது. ஒரு நபருக்கு பொய்யாக வலி இருப்பதாக பொய்யாக சொல்லலாம் என்றால் சரியல்ல. காயத்தை சுற்றியிருக்கும் வீக்கத்தை அழுத்திப் பார்க்கும்போது காயம் பட்டவர் வலி இருப்பதாக பொய்யாக சொல்ல முடியாது.

**<u>மறுவிசாரணை</u>** இல்லை

என் முன்னால் எதிரியின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

**Sd/- P. Rangeswari,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**திருவிடைமருதூர்(FAC).**